பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு: *ஆசிரியர்*, நாமக்கல் கவிஞர்.

ஸ்ரீ பியாரிலால்ஜீயால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

10 ] சென்னை—ஞாயிறு, ஜூன் 16, *1946*. [ விலை. அணா. 2

## தியானமே தகுந்த முறை

*பரதானந்தர் என்று வழங்கி வரும் திரு. ப்ரைட்மன் என்பவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—*

“எனக்குத் தங்களிடம் அதிகமான கவர்ச்சி யுண்டாயிருப்பதற்குக் காரணம் தாங்கள் உண்மையையும் அஹிம்சையையும் வற்புறுத்தி வருவதே யாகும். அஹிம்சையை அனுஷ்டிப்பதற்கு வெறும் ஆசை மட்டுமிருந்தால் போதாது என்று உணர்ந்ததும் அஹிம்சையைப் போதிப்பதோடு அதை அனுஷ்டிப்பதற்கான மார்க்கத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதையும் உணர்ந்தேன்.

அஹிம்சையிடம் மோகங் கொள்வதும் அஹிம்சையாக நடக்க ஆசை கொள்வதும் மட்டுமே ஒருவனை அஹிம்சையாக நடக்கும்படி செய்துவிடா. நம்முடைய மனத்தில் இரண்டு பகுதிகள் உள. ஒன்றுதான் நாம் சாதாரணமாக மனம் என்று சொல்வதும் அறிந்ததுமாகும். மற்றொன்று அதனடியில் மறைந்துள்ள பாகம். அதில்தான் நம்மை அறியாமலே நம்மை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கும் ஆசைகளும் அச்சங்களும் குடிகொண்டிருக்கின்றன. நாம் எவ்வளவு தூரம் ஒரு புதிய லட்சியத்தில் ஊறிப்போன போதிலும் மனத்தின் அடிப் பாகத்திலுள்ள ஆசைகளும் அச்சங்களும் அகன்றால் தான் நாம் மேற்கொள்ளும் புதிய லட்சியம் நம்முடைய உண்மையான சுபாவமாக ஆகி நம்முடைய செயல்களில் பிரதிபலிக்க ஆரம்பிக்கும்.

ஆதலால் உண்மையையும் அஹிம்சையையும் அனுஷ்டிப்பதற்கு உண்மையிலே விருப்பம் உடையவர்களுக்கு அதற்குத் தடையாகவுள்ள ஆசைகளையும் அச்சங்களையும் அகற்றுவதற்குரிய வழியைக் காட்டுதல் அவசியமாகும்.

ஆகவே உண்மையாகவும் அன்பாகவும் நடப்பதற்குப் பிரார்த்தனை, கைத்தொழில் போன்ற புற அனுஷ்டானங்கள் பயனுள்ள சாதனங்கள் ஆக மாட்டா. மனித ஜாதியின் சரித்திரம் முழுவதும் இதை ஆமோதிக்கின்றது. சரியான முறையில் மனத்தால் செய்யும் முயற்சியினால்தான் மனிதனைப் புனர் நிர்மாணம் செய்ய இயலும். நல்ல லட்சியங்கள் இருந்தால் போதாது. அவற்றிற்கேற்ற சாதனங்களும் தேவையாகும். அதிருஷ்ட வசமாக அத்தகைய சாதனங்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றை வெகு சிலரே கையாண்ட போதிலும் ஆன்றோர்களின் அனுபவம் மூலம் பயனுள்ளவை என்றும் மனித இயல்புக்கு ஒத்தவை என்றும் கண்டறியப்பட்டவைகளாகும். புத்த பெருமான் தலை சிறந்த வழியாகச் சிபார்சு செய்யும் “தியானம்” என்னும் முறையையே குறிப்பிடுகின்றேன். அவர் எப்பொழுதும் படாடோபமின்றி சர்வ ஜாக்கிரதையாகப் பேசும் இயல்பினராயினும் “இந்த வழியை அனுசரித்தால் ஏழே நாட்களில் பரிபூரண நிலை அடையலாம்” என்று துணிந்து கூறுகின்றார்.

தியான முறையைப் பற்றித் தாங்கள் படித்திருக்கிறீர்களோ என்னவோ. அதனால் சுருக்கமாக எழுத விரும்புகிறேன் :

நாம் எப்பொழுதும் இடைவிடாமல் நம்முடைய மனத்தில் எழும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அவை உடல் மூலமாக வெளிப்படும் செயல்களையும் கவனித்து வர வேண்டும். அவற்றைக் கவனித்து வரவேண்டுமே யன்றி அவை சரியா தப்பா என்று ஆராயக் கூடாது. வெறும் கவனம் மட்டுமே தேவை. வேறொன்றும் வேண்டியதில்லை. மூச்சு வாங்கவும் விடவும் செய்கிறோம். இது சரியா தப்பா என்றோ, வேண்டுமா வேண்டாமா என்றோ ஆராயும் எண்ணம் இல்லாமல் அதைக் கவனிப்பது போன்ற கவனம் தான் “தியானத்”துக்குத் தேவையான பற்றற்ற கவனமாகும்.

இந்த விதமாக எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் செயல்களையும் கவனித்து வந்தால் மனமானது தெளிவடைந்து விடுகிறது. அப்பொழுது அதனடியிலுள்ள ஆசைகள் முதலியன மேலே வந்து அழிந்து போய் விடுகின்றன.

இந்த முறையைச் சரியானபடி அனுஷ்டித்தால், எவ்வித சிரமமும் தோன்றாது. மனத்தில் சாந்தியும் சந்தோஷமுமே தோன்றும். அறிவும் அன்பும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும். அவற்றை எதிர்ப்பன எதுவும் அடிமனத்தில் இல்லாமற் போய்விடுவதால் அவையே இயல்பாக ஆகிவிடும்.

இந்த தியான முறை பண்டைக் கால முதல் உள்ள முறை என்பதைக்காட்ட மேனாட்டு நூல்களிலிருந்தும இந்திய நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் எழுத வேண்டிய அவசியமில்லை.

சாஸ்திரங்களில்லாமலே அதை ஏற்றுக்கொள்ளலாம். எளிதாக அனுஷ்டிக்கக் கூடியதாக இருப்பதால் யாரும் அனுஷ்டித்துப் பார்த்துக் கொள்ளலாம். நம்மைப் புனருத்தாரணம் செய்து கொள்வதற்குப் புத்த பெருமான் சிறந்ததோர் சாதனத்தைத் தந்திருக்கிறார் என்பதை ஏழு நாளில் கண்டு கொள்ளலாம்.

ஒவ்வொருவரும் உண்மையாகவும் அஹிம்சையாகவும் நடந்தால்தான் உலகத்தில் உண்மையும் அஹிம்சையும் நிலவ முடியும். அதற்கேற்ற வழியை ஆன்றோர்கள் காட்டியிருக்கிறார்கள். அதை நாமும் அனுஷ்டித்துப் பயனடையலாம். அந்த முறையை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தாலும் சரியானதென்றே புலப்படும்.

இன்னுமோர் விஷயமும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இவைதான் சீக்கிரத்தில் அதிகமான பலனைத் தரும் என்று பொய்யையும் ஹிம்சையையும் உண்மையாகவே ஆதரிப்போருமுளர். ஆனால் அவர்களுக்குத் தியான முறையைக் கற்றுக்கொடுத்து விட்டால், அப்பொழுது அவர்கள் பொய்யின் காரணத்தையும் ஹிம்சையின் காரணத்தையும் உள்ளது உள்ளபடி

அறிந்து கொள்வார்கள். ஆசையும், ஆசையால் ஏற்படும் அச்சமுமே அவற்றின் காரணங்கள். ஆதலால் அவற்றை அறிந்ததும் அவர்களுடைய மனத்திலிருந்து பொய்யும் ஹிம்சையும் நீங்கி உண்மையும் அன்பும் குடிகொள்ளும்.

விஷயத்தைக் கூறுபவரைக் கொண்டு விஷயத்தை மதித்துவிட வேண்டாம். தெளிவாகக் கூறப்படாவிட்டாலும் தங்கள் லட்சியத்துக்கு அவசியமான விஷயமே இது.''

எத்தனையோ முறைகள் கூறப் படுகின்றன. அதில் அநேகம் அனுஷ்டிக்கப்படக் காணோம். அப்படிப்பட்டவைகளில் ஒன்று இது. அதனால் எனக்கு இதில் பற்று உண்டாகவில்லை. ஏழு நாளில் பலன் தெரியுமானால் ஏன் அதை வெகு சிலரே அனுஷ்டித்து வருகிறார்கள்? அது உபயோகமுள்ளதுதான், ஆனால் அதுவே போதும் என்று சொல்ல முடியாது. பிரார்த்தனை முதலிய புற அனுஷ்டானங்கள் வெறும் வேஷமாக மட்டுமில்லாதிருந்தால், இந்த நண்பர் கூறும் "தியானம்'' அவற்றோடு சேர்ந்து நன்மை பயக்கும். பிரார்த்தனையும் வெறும் புறச் சாதனமன்று, அதுவும் மனத்தால் மட்டுமே செய்யவேண்டியதாகும். ராமநாமத்தையே சஞ்சீவியாகக் கண்ட பெரியோர்களுக்கும் தியான முறை தெரியும். ஆயினும் அவர்கள் உண்மையையும் அஹிம்சையையும் அனுஷ்டிப்பதற்கு உபயோகமான முறைகளில் தலைசிறந்தது ராமநாமமே என்று அனுபவம் மூலம் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

முஸோரி, மோ. க. காந்தி.
4—6—46

## எந்த மொழியில்?

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

அரசியல் அமைப்பு வகுக்கும்பொழுது எந்தத் தேசத்துக்காக வகுக்கப்படுகின்றதோ அந்தத் தேசத்தின் மொழியிலே எழுதப்படுவதே விலக்கறியாத வழக்கமாக இருந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

நம்முடைய அரசியல் அமைப்பும் நம்முடைய தேசீய மொழியிலே எழுதப்படுவதே பொருத்தமானது. ஆனால் நம்முடைய ஹிந்துஸ்தானி மொழி ஹைகோர்ட்டு நீதிபதிகளிலும் பெடரல் கோர்டு நீதிபதிகளிலும் வெகு சிலர்க்கே தெரியும். அது ஒரு கஷ்டம். அதனால் அவர்களுக்காக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டியது அவசியமாகும்.

அமைப்பின் சாரமான அம்சங்களைச் சரிவரப் புரிந்துகொள்வதற்கு வேண்டிய அளவு இந்துஸ்தானி, அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்க்குத் தெரியுமா என்பது அடுத்த கேள்வி.''

இந்தக் கடிதம் கூறும் விஷயம் என் மனத்துக்கு ஏற்றதாகவே இருக்கின்றது. நம்முடைய அரசியல் அமைப்பு ஆங்கிலத்தில் வகுக்கப்பட வேண்டிய அவசியம் யாது? அது இந்திய பாஷையிலேயே எழுதப்படவேண்டும். அந்த இந்திய பாஷை கோடிக்கணக்கான மக்களுக்கு அர்த்தமாகும் ஹிந்துஸ்தானியாகத் தானிருக்க முடியும். இப்பொழுதுள்ள நிலைமையில் அரசியல் நிர்ணய சபையார்க்கு ஆங்கில மொழிபெயர்ப்பு அவசியம்தான். அதே மாதிரி மாகாண பாஷைகளில் மொழிபெயர்க்க வேண்டியதும் அவசியமேயாகும்.

இந்த நிருபர் கிளப்பியுள்ள இரண்டாவது விஷயமும் பொருத்தமானதே. ஆனால் அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் பொழுது சட்டசபைகள் இயன்றமட்டிலும் இந்துஸ்தானி பாஷை தெரிந்தவர்களையே தெரிந்தெடுத்து நிருபருடைய யோசனையை நிறவேற்றலாம்.

முஸோரி, மோ. க. காந்தி.
3—6—46

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

## இருவர்க்கும் உருதுவா?

ஹிந்தி மொழிப் பக்தரும் பண்டிதருமான நண்பர் ஒருவர் எழுதுகிறார் :—

(1) தாங்கள் இந்தியர்கள் எல்லோரையும், அதிலும் முக்கியமாகத் தாங்கள் தினந்தோறும் நெருங்கிப் பழகும் இந்துக்கள் எல்லோரையும் உருது கற்கும்படி செய்ய மிகுந்த பிரயத்தனம் செய்து வருகிறீர்கள். அதே மாதிரி எந்த மகமதியராவது முஸ்லிம்களை ஹிந்தி கற்கும்படி முயற்சி செய்து கொண்டிருக்கிறாரா? இல்லையெனில், தங்கள் முயற்சியின் பயனாக ஹிந்தி இந்துக்களுடைய மொழியாகவும் உருது இந்துக்கள் முஸ்லிம்கள் இருவருடைய மொழியாகவும் ஆகிவிடுமல்லவா? அப்படியானால் அது ஹிந்திக்குக் கேடு செய்வதாக ஆகாதா?

(2) ஹிந்துஸ்தானிச் பிரசார சபையாரின் வெளியீடுகளில் ஹிந்திப் பதத்துக்குச் சரியான உருதுப் பதம் அர்த்தசந்திரக் குறியீட்டினிடையில் கொடுக்கப்படுகிறதேயொழிய உருதுப் பதத்துக்குச் சரியான ஹிந்திப் பதம் கொடுக்கப்படவில்லை. அது இந்துக்களை உருது கற்கும்படி நிர்ப்பந்திப்பதாக ஆகாதா?

(3) இந்த வெளியீட்டுக்களில் பெர்ஷிய மொழிகளும் அராபிய மொழிகளும் கணக்கில்லாமல் காணப்படுகின்றன. அவைகள் எல்லாம் சாதாரண மக்களுக்கு அர்த்தமாகும் என்று கருதுகிறீர்களா?

(4) ஹிந்துஸ்தானியையும் ஒரு பாஷையாகக் கருதுவதானால் தங்கள் வாசகப் புத்தகங்களிலுள்ள மொழிகள் உருதுப் பதிப்பில் ஒருவிதமாகவும் ஹிந்திப் பதிப்பில் ஒருவிதமாகவும் காணப்படுவது ஏன?

(5) இதுவரை ஹிந்தியைக் கற்றுவந்த லட்சக்கணக்கான தென்னிந்தியர்கள் இந்த உருது லிபியைக் கண்டு வெருண்டுபோய் இறுதியில் இரண்டு லிபிகளில் எதையும் கற்காது இருந்துவிடக்கூடும் என்றும் இந்துஸ்தானிப் பிரசார சபையார் இதுவரை செய்த வேலை எல்லாம் வீணாய்ப் போய்விடும் என்றும் அஞ்சுகின்றேன்.''

இந்தச் சந்தேகங்களுக்கு என்னுடைய பதில் :

(1) உருது லிபி தெரியாதவர்கள் உருது லிபியையும் ஹிந்தி லிபி தெரியாதவர்கள் ஹிந்தி லிபியையும் கற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஹிந்தி மொழி தெரிந்த இந்துக்களுடன்தான் நான் அதிகமாகப் பழகி வருகின்றேன் என்பது உண்மையே. அதற்காக நான் வருத்தப்படவில்லை. இந்துக்கள் தங்கள் ஹிந்தி மொழியை மறந்துவிடமாட்டார்கள். அவர்கள் உருதுவைக் கற்பதால் அவர்களுடைய ஹிந்தி மொழி அதிகச் சொல்வளமுடையதாகவே ஆகும். ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும் எல்லோர்க்கும் தத்தம் மாகாண பாஷை தெரியவே செய்யும். மாகாண பாஷைகள் அனைத்திலும் ஸமஸ்கிருத பதங்கள் அநேகம் கலந்திருப்பது யாவரும் அறிந்ததே. நான் என்னுடைய முயற்சியின் பயனாக எல்லோரும் ஹிந்தியை விட்டுவிட்டு உருதுவையே கற்கவேண்டும் என்று விரும்பவுமில்லை, உருதுவையே கற்றுவிடுவார்கள் என்று அஞ்சவுமில்லை. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் எது இயற்கைக்கு ஒத்ததோ அதுவேதான் நிகழும். இரண்டையும் சேர்த்து தேசீய பாஷை உண்டாக்கும் முயற்சி எல்லாவிதத்திலும் நல்லதாகும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

(2) நான் ஹிந்துஸ்தானிப் பிரசார சபையாரின் வெளியீடுகள் எல்லாவற்றையும் படிக்கவில்லை. ஹிந்திப் பதங்கள் சிலவற்றிற்குச் சரியான உருதுப் பதங்கள் கொடுத்திருந்தால் அது பாராட்டத் தக்கதேயாகும். இந்த மொழிகள் சாதாரணமாக எல்லோர்க்கும் தெரிந்த மொழிகள் அல்ல என்று ஆசிரியர்கள் எண்ணுகிறார்கள் என்பதே அதன் பொருள். உரு

துப் பதங்களுக்கு ஹிந்திப் பதங்கள் கொடுக்கவில்லை என்றால் அந்த உருதுப் பதங்கள் சர்வ சாதாரணமாக எல்லோர்க்கும் தெரிந்தவை என்பதே பொருள். இந்த நிருபரைப் போன்ற பண்டிதர்களுக்கு இத்தகைய சந்தேகங்கள் உண்டாவது வருத்தம் தருகின்றது. சந்தேகம் கொள்வது பாண்டித்தியத்தின் லட்சணமன்று.

(3) மூன்றாவது குற்றச்சாட்டு சரியானதாகத் தோன்றவில்லை, அது உண்மையானதாகவே யிருந்தாலும் என்ன கேடு ஏற்பட்டுவிடப் போகிறது? புது மொழிகள் சேர்ந்தால் பாஷை வளம்பெறவே செய்யும். நார்மண்டி தேசத்தார் இங்கிலாந்தை ஜெயித்து ஆள ஆரம்பித்த பிறகு, லத்தீன் அடியாகப் பிறந்த மொழிகள் இங்கிலீஷ் பாஷையில் வந்து சேர்ந்ததால் இங்கிலீஷ் பாஷையின் வீறு அதிகப்படவே செய்திருக்கின்றது. தீமை செய்பவைகளும் அனாவசியமானவைகளும் திணிக்கப்பட்டவைகளும் நிலைத்து நிற்கமாட்டா. அநேக பெர்ஷிய மொழிகளும் அராபிய மொழிகளும் வடநாட்டார்க்குத் தெரிந்துபோய் விட்டபடியால் ஹிந்தி பாஷையில் இடம் பெற்று விட்டன. அவைகள் தென்னிந்தியருக்குப் புதியன. அதனால் சமஸ்கிருத பதங்கள் கொடுக்கவேண்டிய தவசியம். அதனாலேயே அவை அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டுள. உண்மை யாதெனில் ஹிந்துஸ்தானிப் பிரசார சபையார்க்கு ஒன்றினிடம் துவேஷமும் மற்றொன்றினிடம் பாரபட்சமும் கிடையாது என்பதேயாகும். இரண்டும் இருந்தே தீரும். இரண்டினிடையிலும் துவேஷமோ பொறுமையோ ஏற்படுமானால் இந்துஸ்தானி பாஷை உருவாகாமல் போய்விடும். உருவாகாமற் போவது நாட்டுக்குத் தீமையான காரியமேயாகும்.

(4) ஹிந்துஸ்தானி பாஷை முன்னாலேயே இருந்த பாஷைதான். இப்போது ஹிந்தியையும் உருதுவையும் நல்ல முறையில் சேர்த்துப் புத்துயிர் அளிக்கவும் வளர்க்கவுமே முயற்சி செய்யப்படுகிறது. இதைக் குறித்து ஹிந்தி பக்தர்களும் உருது பக்தர்களும் வருத்தப்படவேண்டியதில்லை. ஹிந்தியும் உருதுவும் சகோதரிகள் ஆவார்கள். அவை இரண்டும் ஒன்று சேர்ந்தால் அதனால் ஏற்படும் கேடு யாது? இந்த இடைக்காலத்தில் ஹிந்திப் புஸ்தகங்களிலும் உருதுப் புத்தகங்களிலும் வேறு வேறு மொழிகள் காணப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் கிடையாது.

(5) இந்த விஷயத்தில் என்னுடைய அனுபவம் வேறுவிதமானதாகும். உருது லிபியை கற்கச் சொன்னதால் இரண்டையும் கற்காதிருந்தவர் யாரையும் நான் கண்டதில்லை. அந்த விதமாக நிகழும் என்று நான் அஞ்சவுமில்லை.

இறுதியில் நான் இந்த நிருபரிடம் வேண்டிக் கொள்வது அவர் காரணமின்றி உண்டாயிருக்கும் துவேஷங்களைத் துறந்துவிடவேண்டும் என்பதேயாகும்.

முஸோரி, மோ. க. காந்தி
4—6—46

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## அஸ்ஸாமில் நடக்கும் கஸ்தூரிபாய் நிதி வேலை

ஸ்ரீமதி அமல பிரபா என்பவர் அஸ்ஸாமில் சாரணியா என்னும் இடத்தில் தாம் செய்த வேலையைக் குறித்து அனுப்பிய அறிக்கையின் சுருக்கம் வருமாறு :—

கிராமத்துப் பெண்கள் பதினாறு பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆசிரியைகள். இருவர் ஹரிஜன வகுப்பினர். பயிற்சி அளிப்பவர்களில் இருவர் அவர்களுடனேயே தங்கியிருக்கிறார்கள். பெண்களேதான் சமையல் வேலை எல்லாவற்றையும் செய்து வருகிறார்கள். மேட்டில் ஏறி ஜலம் கொண்டுவர வேண்டியதாக இருப்பதால் ஜலம் கொண்டு வருவதற்கு மட்டும் வேலையாள் நியமித்திருக்கின்றோம்.

அங்கே கற்றுக் கொடுக்கும் முக்கியமான கைத்தொழில் பட்டு நூல் சுற்றுதலும் நெசவு செய்தலுமாகும். இந்த வேலை புதியதாகையால் முதல் ஒன்றரை மாத காலத்தில் அதிகமாக ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனாலுங்கூட துணி நெய்ததிலும் நூல் சுற்றியதிலும் சேர்த்து 82 ரூபாய் நிகர லாபம் கிடைத்தது.

பருத்திக் கதரும் உண்டாக்கப் படுகிறது. அது சம்பந்தமான சகல காரியங்களையும் பெண்கள் கற்றுக் கொள்கிறார்கள். தோட்ட வேலையும் செய்கிறார்கள். பெப்ரவரி மாதத்தில் 35 சேர் காய் கறிகள் கிடைத்தன. தினந்தோறும் கவாத்துப் பழகுகிறார்கள். வாரத்துக்கு ஒரு முறை பக்கத்து கிராமத்துக்குப் போய் அங்குள்ள ஜனங்களுக்குச் சேவை செய்து வருகிறார்கள்.

அங்கே கற்றுக் கொடுக்கும் விஷயங்கள் ஹிந்துஸ்தானி, ஆகாரம் சம்பந்தமான அடிப்படை விஞ்ஞானம், சமையல் வேலை, தோட்ட வேலை, சுகாதாரம், தோட்டி வேலை, நிர்மாணத் திட்டத்தின் தத்துவங்கள் ஆகியவை யாகும். வெளியிலிருந்தும் சில நண்பர்கள் வந்து பிரசங்கம் செய்து உதவி செய்தார்கள்.

உணவு சாதாரணமானதுதான், ஆனால் ஆரோக்கியமானதாகும். ராட்டினங்களையும், தறிகளையும் அதிகப்படுத்தினால் அவர்களுக்குத் தேவையான துணி முழுவதும் அங்கேயே தயார் செய்து விடலாம் என்று நம்புகிறோம்.

## விளம்பரம் வேண்டியதில்லை

பிராமண நிருபர் ஒருவர் தாம் ஹரிஜனராகி விட்ட விபரத்தைப் பிரசுரிக்குமாறு வேண்டிக் கொள்வதோடு ஜனக் கணித அறிக்கையில் தம்மை ஸவர்ணர் வகுப்பில் சேர்த்திருப்பதை மாற்றி ஹரிஜன வகுப்பில் சேர்க்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

எல்லோரும் ஹரிஜனங்களிலும் தாழ்ந்த வகுப்பினராகத் தங்களைப் பாவித்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதன் பலனே இது. மனம் மாறியது சரிதான். ஆனால் அதை விளம்பரப்படுத்த வேண்டிய அவசியம் யாது? மனம் மாறியது உண்மைதான் என்று காட்டுவதற்கு மனம் மாறியவர் அதே போல் தினசரி நடந்துகொள்வது ஒன்றேயாகும். அத்தகையவர் தோட்டிகளுடன் பழகவும் அவர்களுடைய வாழ்வில் கலந்து கொள்ளவும் வேண்டும். கூடுமானால் அவர்களுடன் வாழவோ அல்லது தம்முடன் ஒரு தோட்டியை வாழும்படி கூட்டிக் கொள்ளவோ வேண்டும். ஹரிஜனங்களுக்குத் தம்முடைய குழந்தைகளை விவாகம் செய்து கொடுக்கவும் வேண்டும். யாரேனும் கேட்டால் தாமாகவே பிறர் நிர்ப்பந்த மின்றி ஹரிஜன் ஆனதாகவும் ஜனக் கணிதம் எடுக்கும்போது ஹரிஜனாகவோ தோட்டியாகவோ தம்முடைய பெயரைப் பதிவு செய்து கொள்வதாகவும் கூற வேண்டும். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஹரி ஜனங்களுடைய உரிமைகளைப் பெறலாகாது. உதாரணமாக ஹரிஜனங்களுடைய வாக்காளர் ஜாபிதாவில் தம்முடைய பெயரைப் பதிவு செய்து கொள்ளலாகாது. சவர்ணர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் வேறு வேறு வாக்காளர் ஜாபிதாக்கள் உள்ளவரை அவர் வாக்காளராக இருக்கும் உரிமையைத் துறந்துவிட வேண்டும்.

ஆகவே ஹரிஜனராகும் சவர்ணர்கள் ஹரிஜனங்களுக்குள்ள உரிமைகளை அனுபவியாமல் ஹரிஜனங்களுக்குள்ள கடமைகளை நிறைவேற்றுவதே முறையாகும்.

புது டில்லி, மோ. க. காந்தி.
9—6—46

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

# தமிழ் ஹரிஜன்

...... தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர். ......

ஜூன் 16 ஞாயிறு 1946


## அறியாத பொருள்

அறிஞர்களில் சிலர் "அறிய முடியாத பொருள்" என்றும், சிலர் "அறியாத பொருள்" என்றும், சிலர் "இதுவன்று" என்றும் கடவுளை வர்ணிக்கிறார்கள். இப்போது நான் கூறப்போகும் விஷயத்துக்கு "அறியாத பொருள்" என்னும் வர்ணனையே பொருத்தமாகும்.

நேற்று (ஜூன் 9-ந்தேதி) பிரார்த்தனைக் கூட்டத்தில் சில மொழிகள் பகர்ந்தபோது, இந்தப் பெரிய "அறியாத பொருளை'யே நாம் நமக்கு ஆற்றலை அருளும்படியாகவும் வழியைக் காட்டும்படியாகவும் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அப்படிப் பெறும் ஆற்றலையும் வழியையும் நம்பியே நாம் வாழவேண்டும் என்பதையுந் தவிர வேறு எதுவும் சொல்ல இயலாத நிலையிலிருந்தேன். இப்போது இந்தியாவில் நடத்தப்பட்டு வரும் பெரிய நாடகத்தில் எல்லாக் கட்சியாரும் சமாளிக்க வேண்டிய கஷ்டங்கள் பலவுள. "அறியாத பொருளா"னது அநேக சமயங்களில் மனிதனுடைய அறிவை அஞ்ஞானமாக்கி விடுகின்றது. அவன் தடபுடலாக வகுக்கும் திட்டங்களை எல்லாம் கண்மூடித்திறக்கும் நேரத்துக்குள் குப்புறக் கவிழ்த்து விடுகின்றது. பிரிட்டிஷ் கட்சியார் அறியாத பொருளாகிய கடவுளிடம் நம்பிக்கை யிருப்பதாகக் கூறுகிறார்கள். முஸ்லிம் லீக் கட்சியாரும் அவ்விதமேதான் கூறுகிறார்கள். அல்லா-ஹோ-அக்பர் என்று கோஷிப்பதில் ஆநந்தமும் கொள்ளுகிறார்கள். காங்கிரஸுக்கோ அந்த விதமாக கோஷிக்கக்கூடிய ஒரு தனி ஸ்லோகம் எதுவுமில்லை. அதற்குக் காரணம் அது இந்தியா முழுவதுக்கும் அதாவது கடவுளுடைய மாளிகையில் காணப்படும் சகல அறைகளில் உள்ள மக்களுக்கும் பிரதிநிதியாக இருப்பதுதான்.

என்ன இடையூறுகள் நேர்ந்தாலும் இறுதியில் நன்மையே உண்டாகும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை உடையவன். அப்படியிருந்துங்கூட இதை எழுதும் சமயத்தில் அரசியல் அரங்கத்தில் அனைத்தும் சரியாகவே நடந்து விடும் என்று தீர்மானமாகக் கூற முடியாதவனாகவே இருக்கின்றேன். ஆதலால் நான் கூறக் கூடியதெல்லாம் சகல கட்சியாரும் தங்களாலான முயற்சிகள் எல்லாம் செய்த பிறகும் காரியசித்தி உண்டாகாமற் போகுமானால் அவர்கள் என்னுடன் சேர்ந்து "அதுவும் நல்லது தான், சித்தியாமையேதான் சில சமயங்களில் சித்தியாக இருப்பதுண்டு" என்று எண்ணும்படியாக யோசனை கூறுவதுதான். நாம் எல்லோரும் கடவுளுடைய குழந்தைகள் என்பதை அறியாதிருந்தாலுங்கூட நாம் கடவுளுடைய குழந்தைகளாகவே இருப்பதால், எது நேர்ந்தாலும் அதைச் சந்தோஷமாகவே ஏற்றுக் கொண்டு அடுத்த முறையேனும் காரியசித்தி கிடைக்கும்படியாக உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் உழைப்போம். ஒவ்வொரு கட்சியாரும் இந்தியா முழுவதுக்கும் எது நன்மையோ அதற்காகத் தாங்கள் செய்யக்கூடியதை எல்லாம் செய்து வந்தால்தான் அத்தகைய ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும். அதுதான் இப்பொழுது நடைபெற வேண்டிய அவசியமான காரியம், வேறெதுவுமன்று.

புது டில்லி, 10—6—46 மோ. க. காந்தி.

## முஸோரி முகாம்

முஸோரியில் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடந்த சமயத்தில் நான் பணக்காரர்கள் ஏழைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றும், ஏழைகளும் நல்ல வசதியாகவும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வாழும்படி செய்யவேண்டும் என்றும் மலைவாசத்தால் உண்டாகும் நன்மைகளை ஏழைகளும் பெறுமாறு செய்ய வேண்டும் என்றும் யோசனை கூறினேன். என்னுடைய யோசனைகள் மிகுந்த உற்சாகத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. ஒரு சத்திரம் கட்டுவதற்கான யோசனையை நிறைவேற்றுவதற்காகச் செல்வாக்குள்ள கமிட்டி ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

சத்திரத்தை நல்ல முறையில் நடத்துவதற்காக ஊழியர்கமிட்டி ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று கூறுவதற்காகவே இந்த விஷயத்தை இப்பொழுது எழுதலானேன். வாடகை கிடையாதாகையால் யாரை அனுமதிப்பது என்னும் விஷயம் சிரமமாகவே இருக்கும். வாடகை கொடுக்கச் சக்தியுடையவர்களுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது. வாடகை கொடுக்கச் சக்தி யில்லாதவர்களுக்குத் தான் அனுமதி கொடுக்க வேண்டும். இடம் சுத்தமாக இருக்க வேண்டுமானால் வருபவர்கள், தங்கள் நன்மையை உத்தேசித்தே வகுக்கப்படும் விதிகளைக் கொஞ்சம்கூடப் பிசகாமல் அனுஷ்டிக்க வேண்டும். ஆயினும் அவர்கள் மரியாதையாக நடத்தப்பட வேண்டும். தரித்திரம் என்பது தண்டிக்கப்படத் தகுந்த குற்றம் என்று வருந்தும்படி செய்து விடலாகாது. ரயில் வண்டிகளிலும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் ஏழைகள் மரியாதைக் குறைவாக நடத்தப்படுவதை மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் அறிவார்கள். வறுமைக்கும் ஒரு விதமான பெருமையுண்டு என்று சாஸ்திரங்கள் கூறும் இந்த நாட்டில் ஏழைகள் இழிவாக நடத்தப்படுவதும் அதற்காகப் பணம் செலுத்தும்படி செய்யப்படுவதும் துர்அதிர்ஷ்டமானகாரியமேயாகும். இந்த துக்ககரமான சூழ்நிலையில் தான் இந்த விருந்தினர் இல்லம் கட்டப்படப் போகிறது. அதை நிர்வகிக்கும் வேலை மிகக் கஷ்டமானது. அந்தக் கஷ்டமான வேலையையும் யாவர்க்கும் திருப்தியாகச் செய்யக்கூடிய ஒருவரைக் கண்டு பிடித்து அந்த இல்லத்தை நடத்தும்படி சொல்ல வேண்டும். அத்தகைய பெரியார் கிடைத்து விட்டால் மலைவாச ஸ்தலங்களிலுள்ள சத்திரங்கள் எவ்லாம் முஸோரியி லுள்ளது போலவே சிறநததாக ஆகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

முஸோரி, மோ. க. காந்தி
8—6—46

## காசுகளைப் பத்திரப்படுத்தினால்....

சட்டசபை அங்கத்தினர்களாகவுள்ள பெரியோர்கள் சட்டசபைக்குச் சம்பந்தமில்லாத காரியங்களுக்குக்கூட அதிக விலையுயர்ந்த கடுதாசியையே கடிதம் எழுதுவதற்கு உபயோகிப்பதைக் காண்கின்றேன். சட்டசபை அங்கத்தினர்கள் பெறும் கடுதாசியை அவர்கள் வெளியே எடுத்துவரக் கூடாது. சட்ட சபையில் வைத்துக்கூட சட்டசபை விஷயமாக உபயோகிக்கலாமே யன்றி நண்பர்களுக்கோ உறவினர்களுக்கோ கடிதம் எழுத உபயோகிக்கக் கூடாது. தம்மைத் தெரிந்தெடுத்த வாக்காளர்களுக்குக்கூட பொதுநல விஷயமாகவே அந்தக் கடுதாசியில் எழுதலாம். இதுதான் எல்லாத் தேசங்களிலும் நடைபெற்று வரும் வழக்கமாகும்.

நம்முடைய நாடு எளிய நாடாகையால் இதை விடப் பெரிய ஆட்சேபம் ஒன்றும் கூற விரும்புகின்றேன். நான் குறிப்பிடும் கடுதாசி முதலியன நம்முடைய நாட்டு வருவாய்க்கு ஏற்றதல்ல. இங்கிலீஷ் காரர்கள் மிக அதிகமாகச் செலவு செய்யும்

தேசத்தினர். அத்துடன் நம்மிடம் பயபக்தி உண்டாக்கியே இந்த நாட்டில் வாழ்ந்து வரவேண்டியவர்களாக உள்ளவர்கள். அந்தக் காரணத்தால்தான் அவர்கள் காரியாலயங்களையும் பங்களாக்களையும் அதிகப்பணம் செலவு செய்து பழுது ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு ஒரு படைவேலைக்காரர்கள் வேண்டியதாகவுள்ள பிரமாண்டமான கட்டடங்களைக் கட்டி வருகிறார்கள். நாமும் அவர்களைப்போல் நடக்க ஆரம்பித்தால் நாமும் அழிந்துபோய் நம்முடைய நாட்டையும் அழியும்படி செய்துவிடுவோம். தேசத்தை ஜெயித்து ஆள்வோர் செய்வதைச் சகித்துக் கொள்வதுபோல் ஜனப்பிரதிநிதிகள் செய்வதைச் சகித்துக்கொள்ள முடியாது.

அத்துடன் இப்பொழுது கடுதாசிப் பஞ்சமும் ஏற்பட்டிருக்கின்றதல்லவா? ஆதலால் இந்த விதமாக அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்யும் வழக்கங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும். கையால் செய்த கடுதாசியில் பெயரும் விலாஸமும் நாகரி லிபியிலும் உருது லிபியிலும் அச்சிட்டு உபயோகிக்க வேண்டும். உயர்ந்த கடுதாசி தயார் செய்யப்பட்டுவிட்டதே என்று கூறி உபயோகியாமல் அதை வேறு காரியங்களுக்கு உபயோகிக்கச் செய்துவிட வேண்டும். அந்த விலையுயர்ந்த கடுதாசிகள் அன்னிய நாட்டிலிருந்து வந்த கடுதாசியாகக் கூட இருக்கலாம். எதுவானாலும் அத்தகைய விலையுயர்ந்த கடுதாசி எல்லாம் செலவாகட்டும், கையால் செய்த கடுதாசியைப் பிறகு உபயோகிப்போம் என்று கூறிக் கிராமத்தில் உண்டாக்கப்படும் பொருள்களைக் காத்திருக்கும்படி செய்தலாகாது. பொது ஜனங்களுடைய சர்க்கார்கள் பொது ஜனங்களுக்கு உகந்ததும் சிக்கனமானதுமான வழக்கங்களையேமேற்கொண்டு, உண்மையிலேயே பொதுஜன சர்க்கார்தான் என்பதை ஆரம்பத்திலேயே காட்டிவிட வேண்டும்.

முஸோரி, மோ. க. காந்தி
8—6—46

## ஹிந்துஸ்தானி

ஹிந்திப் பத்திரிகைகளும், உருதுப் பத்திரிகைகளும் "ஹரிஜன சேவக்" பத்திரிகையின் உருதுப் பதிப்பைக் குறித்து எழுதியுள்ள கண்டனங்களில் சிலவற்றை திரு. ஜீவான்ஜி தேசாய் அனுப்பியிருக்கிறார். அந்தப் பத்திரிகைகள் "ஹரிஜன சேவக்" பத்திரிகையின் ஹிந்துஸ்தானியைக் கேலி செய்திருக்கின்றன. ஹிந்திப் பத்திரிகைகள். அனாவசியமான உருதுப் பதங்களைக் கொண்டு நிறைத்திருப்பதாக எண்ணுகின்றன. உருதுப் பத்திரிகைகள், முஸ்லிம்களுக்குத் தெரியாத சமஸ்கிருதப் பதங்களை உபயோகித்திருப்பதாகக் குறை கூறுகின்றன.

இந்தக் கண்டனங்களைக் காண எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. அப்படியானால் ஏன் "ஹரிஜன் கித்மத்கார" என்று கூறாமல் "ஹரிஜன் சேவக்" என்று பெயர் வைக்கவேண்டும்? ஏன் "எடிட்டர்" என்றோ "முதிர்" என்றோ கூறாமல் "சம்பாதக்" என்று கூறவேண்டும் என்று கேட்கிறார்கள்.

ஹிந்தி பக்தர்கள் ஹிந்தியும் ஹிந்துஸ்தானியும் ஒன்றேதான் என்றும், உருது பக்தர்கள் உருதுவும் ஹிந்துஸ்தானியும் ஒன்றேதான் என்றும் எண்ணுகிறார்கள். இந்தவிதமான கண்டனங்களைக் கண்டதும் நான் இதென்ன தொல்லை! இனிமேல் உருது லிபி வேண்டாம் என்று உருது லிபியை விட்டு விடுவேன் என்று நம்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய நம்பிக்கை நிறைவேறப் போவதில்லை. உருதுவும் ஹிந்தியும் ஹிந்துஸ்தானி யாகா. இன்று வழக்கத்தில் இல்லாவிட்டாலும் இரண்டையும் சரியானபடி சேர்த்ததே ஹிந்துஸ்தானியாகும். பத்திரிகாசிரியர்களும் பிறரும் கொஞ்சம் பொறுத்திருப்பார்களானால் இரண்டும் நல்லவிதமாகச் சேர்ந்து ஹிந்துஸ்தானி உருவாவதைக் கண்டுவிடுவார்கள். "ஹரிஜன சேவக்" பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் திண்டாடுகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆயினும் அவர்கள் வெற்றிபெறவே முனைந்து நிற்கின்றார்கள். வாசகர்களும், இரண்டும் சேர்ந்து கதம்பம்போல் தோன்றும் இன்றைய ஹிந்துஸ்தானியைக் கண்டு பொறுத்துக்கொள்ளவே வேண்டும். கடவுள் எனக்கு நீண்ட ஆயுள் அருள்வாரானால் "ஹரிஜன சேவக்" பத்திரிகையின் வாசகர்களுக்கு ஹிந்தியைப் போலவும் உருதுவைப் போலவும் ஹிந்துஸ்தானியும் இனிமையாக இருக்க முடியும் என்பதைக் காட்டிவிடுவேன் என்று நம்புகிறேன். இரண்டும் சகோதரிகள் தாம் என்பதையும் இரண்டும் ஒத்துழைத்துக் கோடிக் கணக்கான இந்திய மக்கள் உபயோகிக்கத் தகுந்த கம்பீரமான ஒரு பாஷையை உண்டாக்கிவிட முடியும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இப்பொழுது எழுந்துள்ள விவாதங்கள் அதி சீக்கிரத்தில் மறைந்து போகும்.

இடைக்காலத்தில் நண்பர்கள் பிழைகளாகத் தோன்றுகிறவைகளை எடுத்துக் காட்டவே வேண்டும். நட்பு முறையில் ஏற்றுக்கொண்டால் அந்தக் கண்டனங்கள் "ஹரிஜன சேவக்" பத்திரிகையின் பாஷையை உயர்ந்ததாகச் செய்வதற்கு உதவவே செய்யும்.

முஸோரி, மோ. க. காந்தி.
5—6—46

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

## பெட்ரோலும் கள்ள விற்பனையும்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"நேரக் குறைவால் சுற்றுப் பிரயாணத்தை எல்லாம் ரயில் மூலமாகச் செய்வது எப்போதும் சாத்தியப்படாமலிருக்கிறது. அதனால் ஊழியர்கள் தூரமான இடங்களுக்கு மோட்டார்காரில் பிரயாணம் செய்யவேண்டி யிருக்கிறது. பெட்ரோல் பங்கீடு செய்யப்படுவதால் பிரயாணத்திற்குத் தேவையாகும் பெட்ரோலை கள்ள மார்க்கட்டில் தான் வாங்க வேண்டியதாக ஏற்படுகிறது. யார் மூலமாகவேனும் வாங்கப்படுகிறது. அல்லது கார் ஓட்டுபவரே வாங்கி வருகிறார். அவருக்கு அந்த விலை விகிதத்தை அனுசரித்தே வாடகை கொடுக்கப்படுகிறது.

இந்த நிலைமையில் ஊழியர்கள் மோட்டார் காரில் பிரயாணம் செய்வது சரியா?

செய்யக் கூடாது என்றால் அவர்கள் சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியது தான். அப்படிச் செய்தால் வேலை கெட்டுப்போகுமல்லவா? அதனால் கள்ள மார்க்கட்டில் பெட்ரோல் வாங்குவதைத் தவிர வேறு வழி கிடையாதல்லவா?"

உண்மையில் நம்பிக்கையுள்ள ஊழியர்கள் இந்த விதமாக மோட்டார்கார் உபயோகப் படுத்துவது கூடாது என்பதே என்னுடைய அபிப்பிராயம். அவ்விதமான நம்பிக்கை யில்லாதவரா யிருந்தாலுங் கூட, செய்கின்ற சேவையைச் சிந்தனை செய்து செய்யக் கூடியவரா யிருந்தாலும் அதைச் செய்யமாட்டார். அப்படிச் செய்வாரானால், தெரிந்துகொண்டே கள்ள விற்பனையை ஆதரிப்பவராகின்றார். அதனால் தீமையே உண்டாகும். சேவை செய்வதற்கு எந்த நேரமும் காரை உபயோகிப்பது என்பதும் தவறேயாகும் என்று கூடச் சொல்வேன்.

புது டில்லி, மோ. க. காந்தி.
10—6—46

[ஹரிஜனபந்துவிலிருந்து]

## உண்மைதான் புதிதன்று

லட்சுமணபுரியிலுள்ள மௌல்வி ஹமிதுல்லா சாகேப் நான் முஸோரியிலிருந்த சமயம் என்னைப் பார்க்கவந்தபொழுது தம்முடைய இரண்டு சிறு நூல்களை என்னிடம் கொடுத்தார். சிறுவர்களும் சிறுமிகளும் உயர்தர வகுப்புக்களிலும் ஹிந்தியையும் உருதுவையும் இரண்டு லிபிகளிலும் கற்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறுவதே அந்த நூல்களின் நோக்கம். நான் சதாகாலமும் முயன்று வருவதும் அந்த லட்சியசித்தி அடைவதற்காகவே. மௌலானு ஹஸரத் மொஹானியும் பாபு புருஷோத்தம்தாஸ் தண்டனும் அதே லட்சியத்துக்காக வேலை செய்த காலமுமுண்டு. ஆனல் நாங்கள் வெற்றிபெற்ருேமில்லை. ஆயினும் நான் நம்பிக்கையை இழக்காமலும் முயற்சியைக் கைவிடாமலும் இருந்து வருகின்றேன். அதன் பயனுகவே இந்துஸ்தானிப் பிரசார சபை அமைக்கப்பட்டது. ஆதலால் மௌல்வி சாகேபினுடைய வேண்டுகோள் எனக்குப் புதியதானதன்று.

ஐக்கிய மாகாண சர்க்கார் பொதுஜன சம்மதத்துடன் இந்த முயற்சியைச் செய்ய முடியுமானல் அவர்கள் பெரியதோர் சேவை செய்தவர்களாவார்கள். ஹிந்தியோ உருதோ தாய் பாஷையாக உள்ள மாகாணங்களில் மற்றதையும் கட்டாயமாகக் கற்குமாறு செய்யவேண்டுமென்பதே என்னுடைய அபிப்பிராயம். அப்படிச் செய்தால் ஹிந்தியும் உருதுவும் ஒன்ருகச் சேர்ந்து ஹிந்துஸ்தானியாக உருவாவதற்கு வசதியாக இருக்கும். இரண்டு சகோதரிகளிடையிலும் இப்பொழுது நிகழ்ந்து வரும் தர்க்கவாதங்கள் அப்பொழுது நின்று போகும். உயர்தரப் பாடசாலைப் படிப்பு முழுவதும் ஆங்கிலத்தில் நடவாமல் தேசிய பாஷையில் நடப்பதாகிய மற்ருெரு நன்மையும் உண்டாகும்.

முஸோரி மோ. க. காந்தி
5—6—46.
(ஹரிஜன ஸேவக்கிலிருந்து)

## செம்மாரும் அரசரும்

காஷ்மீர் தேசத்தை அரசாண்ட சந்திரபீடர் என்னும் அரசர் விஷ்ணு கோவில் ஒன்று கட்ட ஆரம்பித்து அதற்குத் திரிபுவன சுவாமி என்று நாமகரணம் செய்தார். கோவில் கட்டுவதற்காகத் தீர்மானிக்கப்பட்ட நிலத்தில் செம்மார் ஒருவருடைய குடிசை யிருந்துகொண்டிருந்தது. எவ்வளவு பணம் தந்தாலும் அதைக் கொடுத்துவிட அவர் சம்மதிக்க வில்லை. உத்யோகஸ்தர்கள் இந்த விஷயத்தை அரசரிடம்போய் உரைத்தார்கள். அவர் "நீங்கள் தான் தவறு செய்துவிட்டீர்கள், வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் செம்மாரிடம் கேட்கவேண்டாமா? அவரை இப்பொழுது அந்த இடத்திலிருந்து அகற்றுவது கூடாத காரியம். அதனல் கோயிலைச் சிறியதாக ஆக்கிக்கொள்ளுங்கள் அல்லது வேறு இடத்தில் கட்டுங்கள். சரி தப்பு என்று தீர்ப்புக் கூறவேண்டியவரே தவறு செய்தால் யாரிடம் போய் நியாயம் பெறுவது?" என்று கூறினர்.

இந்த விவாதம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் அரசரைப் பார்ப்பதற்காக அந்தச் செம்மார் வந்திருப்பதாக வாயிற்காப்போர் வந்து கூறினர். அரசர் அவரை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார். அவர் வந்ததும் அரசர் :—"என் கோயில் கட்டுவதைத் தடுக்கின்றீர்? உமக்கு நல்ல வீடு கட்டித் தருகின்றேன். உமக்குப் பிரியமானல் நீர் கேட்கும் பணமும் தருகின்றேன்" என்று கூறினர்.

செம்மார் :—"அரசரே! தாங்கள் ஆடை ஆபரணங்கள் அணிந்து கொள்கிறீர்கள், அவை எதுவும் என்னிடம் கிடையாது. ஆயினும் நீர் உம்முடைய உடலை நேசிப்பது போலவே நானும் என்னுடைய உடலை நேசிக்கக் கடமைப் பட்டவனுவேன். உமக்கு உம்முடைய அரண்மனை அருமையாக இருப்பது போலவே எனக்கும் என்னுடைய குடிசை அருமையானதாகும். நான் என்னுடைய குடிசையில் குழந்தைப் பருவமுதலே வசித்து வருகின்றேன். அது இன்பத்திலும் துன்பத்திலும் என்னுடைய தோழனுக இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது அதைப் பிறர்க்குக் கொடுப்பது எப்படி? தேவலோகத்திலிருந்து தேவர்களையும் அரண்மனையிலிருந்து அரசர்களையும் போகச் சொன்னல் அவர்கள்தாம் வீடு இல்லாமலிருப்பதன் துக்கத்தை உணர்வார்கள். ஆயினும் தாங்கள் என்னுடைய குடிசைக்கு வந்து கேட்டால் நான் பெரியோர்களைப்போல அதைத் தங்கட்குத் தந்துவிடுவேன்"

அப்படியே அரசர் செம்மாருடைய வீட்டுக்குச் சென்று நிறையப் பணம் கொடுத்துக் குடிசையை வாங்கிக் கோவில் கட்டினர்.

வி. ஜி. தேசாய்.

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## போதாது

குஜராத் மாகாணத்து ஜனங்கள் இன்னும் ஹரிஜனங்களைப் பொதுக் கிணறுகளில் ஜலம் எடுக்க அனுமதிக்கிருர்களில்லை என்பதாகவும் இதுபோல் ஹரிஜனங்கட்குப் பல அநீதிகள் செய்யப்படுவதாகவும் திரு. ஹேமந்த குமார் எழுதினர். அதன்மேல் காந்தியடிகள் இந்தத் தவறுகளுக்கு ஏற்ற பரிகாரம் செய்ய வேண்டும் என்பதாக குஜராத் மாகாணவாசிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதன் காரணமாக அநேக இடங்களில் சவர்ணர்களுடைய மனச்சான்று விழித்து வருகின்றது. சபர்மதியிலுள்ள ஹரிஜன் ஆச்சிரமத்தைச் சேர்ந்த திரு. பரிக்ஷித்லால் குஜராத்திலுள்ள கிராமங்கள் சிலவற்றில் தாம் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த அனுபவத்தைக் குறித்து கீழ்க் கண்டவாறு எழுதுகிருர் :—

"நான் சமீபத்தில் சூரத் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். நான் சென்ற இரண்டு கிராமங்களிலுள்ள ஜனங்கள் பொதுக் கிணறுகளில் ஜலம் எடுத்துக் கொள்ளும்படி ஹரிஜனங்களுக்குச் சந்தோஷமாக அனுமதி அளித்திருக்கிருர்கள். இப்படி அனுமதி அளித்தது தேசிய வாரத்தின்பொழுதாகும். அந்த வாரத்தில் அவர்கள் ஹரிஜனங்களைப் பொதுக் கிணறுகளுக்கு அழைத்துச் செல்வதற்காக ஒரு விழா நடத்தினர்கள். அந்த இரண்டு கிராமங்களிலுமுள்ள ஹரிஜனங்களில் பெரும்பாலோர் "கோலி" என்னும் வகுப்பினரே யாவர்.

சாலிஸி தாலூகாவிலுள்ள புடியா கிராமத்தில் முதலில் பொதுக் கிணற்றில் ஜலம் எடுக்கும் விழாவும் பிறகு சம பந்தி போஜனமும் நடைபெற்றன. இந்தக் கிராமத்தில் ஹரிஜனங்களுக்குத் தனியாக ஒரு கிணறு இருந்து வருவதால் அவர்கள் புதிதாக அனுமதி அளிக்கப்பட்ட பொதுக் கிணறுகளுக்குப் போக சங்கோஜப்படுகிருர்கள். ஆனல் கிராமத்து ஜனங்களில் பெரும்பாலோர் தங்களிடம் பரிபூரணமான அனுதாபத்துடனிருக்கிருர்கள் என்பதை ஒத்துக் கொள்கிருர்கள். ஒரு பொதுக் கூட்டமும் நடந்தது, கோலிப் பெண்களும் வந்திருந்தார்கள்.

அதே தாலூகாவிலுள்ள ஹஜீமா என்னும் கிராமம் சூரத் ஜில்லாவில் கடற்கரையிலுள்ள பேர்

பெற்ற சுக வாசஸ்தலமாகும். அங்குள்ள இளைஞர்கள் 1942 இயக்கம் முதற்கொண்டு "பால மந்திரம்" என்ற சங்கத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள். சர்க்கா சங்கம் ஒரு நெசவுப் பாடசாலை நடத்தி வருகின்றது. மூத்தோர்க்குக் கல்வியளிக்கும் வகுப்புக்களும் நடந்து வருகின்றன. இந்தக் கிராமத்தில் ஹரிஜனக் குடும்பம் ஒன்றே ஒன்றுதான் இருக்கின்றது. இந்தக் குடும்பத்திலுள்ள ஒரு தோட்டிச் சகோதரியின் நெற்றியில் மங்கள திலகமிட்டுப் பொதுக்கிணற்றுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அந்த ஏழைப் பெண்ணிடம் தண்ணீர் இறைப்பதற்கு கயறு கிடையாது. சவர்ணப்பெண் ஒருத்தி அவளுக்கு ஒரு கயறு கொடுத்தாள். இப்பொழுது அந்தக் கிணற்றில் ஹரிஜனங்கள் ஜலம் எடுப்பதற்கு எவ்விதத் தடையுமில்லை.

கெய்ரா ஜில்லாவிலுள்ள வடாட்லா என்னும் கிராமத்திலுள்ள இளைஞர்கள் தங்கள் கிராமத்திலும் ஹரிஜனங்களுக்கு இந்த உரிமையை அளிக்க வேண்டும் என்று எண்ணி அதற்காகத் தேசிய வாரத்தில் நடக்கும் விழாவுக்கு ஜில்லாவிலுள்ள ஹரிஜன சேவா சங்க ஊழியர்களை அழைத்திருந்தார்கள். ஆனால் அங்குள்ள வைதீகர்கள் அந்த உரிமையை அளிக்கக்கூடிய அளவு மனமாற்றம் அடைந்து விடவில்லை. அதன்மேல் அங்குள்ள வாலிபர்களுடைய தலைவர் தாம் சவர்ணர்களில் பட்டிதார் என்னும் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவராயிருந்த போதிலும், பொதுக்கிணறுகளில் ஜலம் எடுக்க ஹரிஜனங்களுக்கு உரிமை கொடுக்கும் வரைத் தாம் ஹரிஜனங்களுடைய கிணற்றிலேயே ஜலம் எடுத்துக்கொள்ளப் போவதாகக் கூறினர். அவருடைய மனைவியாரும் அந்த விதமாகச் செய்வதாக உறுதி கூறினர். அதன் பின் அநேக இளைஞர்களும் அதேபோல் நடக்கத் தீர்மானித்தார்கள். இது சம்பந்தமாகக் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் ஹரிஜனக் கிணற்று ஜலம் வினியோகிக்கப்பட்டது, இளைஞர்கள் எல்லோரும் பருகினார்கள். இதைக் கண்டதும் வைதீகர்களுடைய மனமானது இளகிவிட்டது; ஹரிஜனங்களுக்கு அனுமதி அளித்து விட்டார்கள். ஆனால் ஹரிஜனங்களோ இன்னும் அந்த உரிமையை அநுபவிக்கத் துணிவில்லாதவர்களாக இருந்து வருகிறார்கள்."

இது எல்லாம் நடந்தமட்டும் நல்லதுதான். ஆனால் குஜராத் மாகாணம் தேசீயச் சுதந்திரப் போரில் முன்னணியில் இருக்கவேண்டுமானால் இவ்வளவு மட்டும் செய்வது போதாது. ஹரிஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள சகல குறைகளையும் இன்ன தேதியில் பரிபூரணமாக நீக்கிவிடுவது என்று ஒரு தேதியைக் குறிப்பிட்டுக்கொண்டு அந்தப்படிச் செய்து முடிப்பதற்கான ஒரு திட்டம் போட்டுக்கொண்டு தீவிரமாக வேலை செய்யவேண்டும். ஏதோ ஒரு காலத்தில் எல்லாக் குறைகளும் நீங்கிப் போகும் என்று கூறுவதில் அர்த்தமில்லை. எப்படிச் சுதந்திரம் இப்பொழுதே இந்த நிமிஷமே வேண்டும் என்று கேட்கிறோமோ அப்படியேதான் ஹரிஜனங்களுடைய விடுதலையும் இப்பொழுதே இந்த நிமிஷமே நடைபெறவேண்டும். சமூகத்தில் எந்த வகுப்பார் இணையற்ற சேவை செய்கிறார்களோ அந்த வகுப்பாருக்கு இன்றியமையாதிருக்கவேண்டிய உரிமைகளைப் பறித்துக் கொண்டால் நாம் சுதந்திரம் பெற்றாலும் அது நமக்கு எந்தவிதமான நன்மையும் செய்யமாட்டாது. சாப்பாட்டுக்குப் பதில் சாம்பலாகவே இருக்கும்.

முஸோரி, மோ. க. காந்தி
7—6—46

## தசாம்ச நாணயங்கள்

தசாம்ச நாணயங்கள் ஏற்படுத்தும் சீர்திருத்தம் சம்பந்தமாக யோசிப்பதற்கு இது ஏற்ற சமயமன்று. அந்த நாணய முறை எவ்வளவு அழகானதாகத் தோன்றினும் சுதந்திரமுள்ள தேசீய சர்க்கார் அமைந்த பின்னரே ஆலோசிக்கப்பட வேண்டியதாகும். இதைவிட அதிக முக்கியமானதும் அவசரமானதுமான விஷயங்களைப் பற்றியே தேசத்திலுள்ள அறிவாளிகள் இப்பொழுது சிந்தித்து வருகிறார்கள். அதனால் நாணயச் சீர்திருத்தம் பற்றிச் சட்டங்கள் இயற்றுவதற்கு முன் எந்த முறையில் அதைச் செய்யலாம் என்பதைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்வதற்குத் தக்க சமயம் இன்னும் வரவில்லை. இங்கிலாந்து செய்யாதிருக்கும் இந்தச் சீர்திருத்தத்தை என் பட்டினியால் சாகும் இந்தியாவில் மட்டும் ஜனங்கட்கு அதன் பலாபலன்களைப் பற்றி எதுவுமே எடுத்துக் கூறாதபடி இவ்வளவு அவசரமாகச் செய்ய வேண்டும்? அது என்ன ஆட்சேபம் கூற முடியாத ஒரு முறையா? அதுவுமன்று. அந்த முறையை அமைத்து விட்டால் நாட்டில் ஒரு தான்யமணியேனும் கூடிவிடப் போகிறதா? அதுவுமன்று. ஆதலால் ரூபாய்க்கு 64 காலணக்கள் இருக்க வேண்டுமா 100 சதங்கள் இருக்க வேண்டுமா என்னும் விஷயத்தை நாட்டிற்கு நல்ல நாள் வரும் காலத்தில் யோசித்துக் கொள்ளலாம். ஜனநாயக ஆட்சி என்றால் சட்டம் செய்யுமுன் ஜனங்களுக்கு அதன் நன்மை தீமைகளைப் பற்றி பொறுமையுடன் கூற வேண்டியது இன்றியமையாததாகும்.

புது டில்லி, மோ. க. காந்தி.
9—6—'46.

## நூல் நூற்றலும் சிகிச்சை முறையே

நூல் நூற்றல், என்பது பலவிதமான உபயோகமுடையது. அவற்றுள், அதை நோயைக் குணப்படுத்தும் சிகிச்சை முறையாக உபயோகிப்பதும் ஒன்றாகும்.மதுரையிலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளியான நிருபர் ஒருவர் கூறுகிறார் :—

"தேசீய வாரத்தின் போது நான் நோயாய்ப் படுத்திருந்தேன். ஆயினும் யக்ஞம் செய்யவேண்டும் என்பதற்காகத் தக்ளியில் நூற்க ஆரம்பித்தேன். இதைக் கண்டதும் பக்கத்திலிருந்த நோயாளிகளும் நூற்க விரும்பினார்கள். எங்களிடம் இரண்டு தக்ளிகளே இருந்தபடியால் நாங்கள் மாற்றி மாற்றி நூற்று வந்தோம். சென்ற வருஷமுங் கூட நான் சிகிச்சைக்காக ஆயுர்வேத ஆஸ்ரமம் ஒன்றில் தங்கி யிருந்தபொழுது தேசீய வாரத்திலும் காந்தி ஜயந்தி வாரத்திலும் இவ்விதமாகவே செய்து வந்தேன். அதைக் கண்டதும் அந்த ஆச்ரமத்திலிருந்த சாதுக்களும் நோயாளிகளும் பிறருமாகச் சுமார் 17 பேர் புதிதாகத் தக்ளிகள் செய்து கொண்டு நான் இயற்றிய யக்ஞத்தில் கலந்து கொண்டார்கள். அவ்விதம் நாங்கள் நூற்ற நூலை கஸ்தூரிபாய்நிதிக்கு அனுப்பி வைத்தோம். அந்த அனுபவத்தின் காரணமாக இப்பொழுது என்னுடன் சேர்ந்து நூற்பதற்கு நோயாளிகள் விரும்புவதைக் கண்டதும் மூங்கிலையும் ஓட்டுத் துண்டையும் கொண்டு தக்ளிகள் செய்ய ஏற்பாடு செய்தேன். 1946 மே மாதம்முதல் வாரத்தில் கால் எலும்பும் முதுகெலும்பும் பழுதாயிருந்த நோயாளிகள் சுமார் ஆறுபேர் சேர்ந்து மொத்தம் சுமார் 6 கழி நூல் நூற்றுவிட்டார்கள். இரண்டாவது வாரத்தில் 30 பேர் நூற்றார்கள். இரண்டு வாரத்திலும் சேர்த்து நெய்யப்பட்ட நூல் 24 கழிகளாகும். நூற்ற நூலின் அளவுக்குத் தக்கவண்ணம் நாலு பேரைப் பொறுக்கி எடுத்து அவர்கட்குச் சந்தா

வாக அந்த நூல் முழுவதையும் அகில பாரத சர்க்கா சங்கததிற்கு அனுப்பிவைத்தேன்.

இது சர்க்கார் ஆஸ்பத்திரி. மொத்தம் 800 நோயாளிகள். நான் இருந்த பகுதியில்மட்டும் சுமார் 70 பேர். எலும்பு முறிவு, எலும்பு க்ஷயம் போன்ற நோயுடையவர்களே இந்தப் பகுதியிலுள்ளவர்கள். இவர்கள் பல மாதங்களோ பல வருஷங்களோ படுக்கையில் இருக்கவேண்டியவர்கள். இப்பொழுது நூற்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இளஞ் சிறுவர்கள். இப்படி நூற்றதிலிருந்து நூல் நூற்பதற்கும் நோயைக் குணப்படுத்தும் சக்தியுண்டு என்பதை அறிந்தோம். நூல் நூற்றால் நோயாளிகளுடைய மனமானது நோயிடம் செல்லாமலிருந்துவிடுகிறது. அதனால் நோயும் கவலையும் தெரிவதில்லை. உற்சாகத்தில் அளவு கடந்து சிரமப்படுத்திக் கொள்ளாமல்மட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது கண்நோய் உள்ளவரும் எங்களுடன் நூற்று வருகிறார்."

இறுதியில் இந்த நிருபர், இந்த மாதிரி ஆஸ்பத்திரிகளில் செய்வது உசிதமா என்றும் இப்படி நூற்கும் நூலை எந்த விதமாக உபயோகிப்பது நல்லது என்றும் வினவுகிறார்.

வேலை மூலம் குணப்படுத்துவது என்பது மேனாட்டில் சர்வ சாதாரணமாக ஆகிக்கொண்டு வருகிறது. அதிலும் முக்கியமாக அமெரிக்காவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் அதற்கென்று பிரத்தியேகமான ஏற்பாடுகளும் வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவில்தான் அது இன்னும் ஏற்றுக்கொள்ளப்படாமலிருந்து வருகிறது. அதை ஆஸ்பத்திரி அதிகாரிகளும் நோயாளிகளின் க்ஷேமத்தில் அக்கறையுடைய பரோபகாரச் சங்கங்களும் ஆதரிக்க வேண்டும். இந்தச் சங்கங்கள் ஆஸ்பத்திரிகளுக்குப் பஞ்சும், ராட்டினமும் தக்களியும் கொடுத்தும் நூற்பதற்குக் கற்றுக்கொடுத்தும் உதவி செய்யவேண்டும். அப்படி நூற்கப்படும் நூலை ஆஸ்பத்திரியிலுள்ள தர்ம சகாய நிதிக்கு எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வேண்டிய துணியாக நெய்யவோ அல்லது அதைக் கொடுத்து அத்தாட்சி பெற்ற கதர் வாங்கவோ செய்யலாம். இந்த உற்சாகம் நோயாளிகளிடமிருந்து அவர்களுடைய உற்றார் உறவினர்க்கும் பரவுமானால், அவர்கள் நோயாயிருந்த காலமும் வீண் போகாமல் தேச சேவையில் செலவானதாகவே இருக்கும்.

முஸோரி, மோ. க. காந்தி.
7—6—46.

## உண்மையிடம் பற்று

திரு. வி. ஜே. தேசாய் "ஹரிஜன பந்து"ப் பத்திரிகையில் குஜராத்தி பாஷையில் இந்திய மக்களுக்கு உண்மையிடமுள்ள பற்றைக் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் இறுதிப் பகுதி வருமாறு :

"மெந்தர்வாலா புருஷோத்தம் மவானி என்பவர் தர்பார் ஸ்ரீ தாலாபாய் தமக்கு ரூ. 4400 ரூபாய் தரவேண்டு மென்பதாகக் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். புருஷோத்தமுடைய தந்தையார் தாமோதர மவானி பஞ்சாயத்துப் பேசித் தீர்த்தால் போதும் என்று தாலாபாய் கூறினார். தாமோதரர் கோர்ட்டுக்குச் சென்று தாம் அறிந்தவரை புருஷோத்தம் 2000 ரூபாயே தாலாபாய்க்குக் கொடுத்ததாகச் சொன்னார். அதன்மேல் தாலாபாய் புருஷோத்தமுக்கு 4,400 ரூபாய் முழுவதையும் கொடுத்து விட்டார்.

ஜேட்புரியில் பொதுச் சதுக்கத்திலுள்ள தண்ணீர்த் தொட்டியின் அருகேயுள்ள நிலம் சம்மந்தமாக இந்துக்களுக்கும் முஸல்மான்களுக்கு மிடையில் ஒரு வழக்கு உண்டாயிருந்தது.

இந்துக்கள் "95 வயதான தாவூத் பீகாவும் ஆபா அபுவும் எப்படிச் சொல்கிறார்களோ அப்படியே நடந்துகொள்கிறோம்" என்று கூறினார்கள்.

அந்த இரண்டு கனவான்களும் நிலம் இந்துக்களுக்குத்தான் சொந்தம் என்று சொன்னார்கள்.

இந்தவிதமாக இந்துக்களுக்குக் கிடைத்த நிலத்தின்மீது இன்றுவரை ஒரு சாதுவின் குடிசை நின்று கொண்டிருக்கின்றது."

பியாரிலால்.

## கேள்வியும் பதிலும்

உபசாரப் பத்திரங்கள் :—

கேள்வி :—ஒரு நிருபர் கூறுகிறார் :—

பல மாகாணங்களில் மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்கள் அதைக்குறித்துப் பெருமை கொள்ளுகிறார்கள். அதனால் மந்திரி யாரேனும் எந்த ஊருக்கேனும் சென்றால் அங்குள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் அவருக்கு விலையுயர்ந்த உபசாரப் பத்திரங்களை வாசித்து மரியாதை செய்கின்றார்கள். இப்படிக் கொடுக்கப்படும் பொருள்களை மந்திரிகளே சொந்தத்துக்கு வைத்துக்கொள்கிறார்கள். இந்த வழக்கம் நல்லதன்று என்பது என்னுடைய அபிப்பிராயம். உபசாரப் பததிரங்களைப் பெறும் வழக்கத்தை நிறுத்திவிடவாவது அல்லது வழங்கப்படும் பொருள்களை உள்ளூர் காங்கிரஸ் கமிட்டிக்குக் கொடுக்கவாவது செய்ய வேண்டும். அது போலவே மந்திரிகளுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பூமாலை அணியும் விஷயமாகவும் ஒரு நல்ல முறையை ஏற்படுத்தவேண்டும். மந்திரிகளுக்கு 300-400 ரூபாய் பெறுமான மாலைகள் போடுவதை நான் பார்த்திருக்கிறேன். இதெல்லாம் பணத்தைப் பாழாக்குவதல்லவா ?"

பதில் :—இந்த நண்பர் கூறுவது முற்றிலும் சரியே. எந்தப் பொதுஜன ஊழியரும் விலையுயர்ந்த உபசாரப்பொருள்களையோ அல்லது பூமாலையையோ தங்களுடைய சொந்த உபயோகத்துக்காக ஏற்றுக் கொள்ளலாகாது. இந்த வழக்கங்கள் பெரும் தொல்லையாக ஆகிவிட்டன. ஆபாசமாக ஆகிவிட்டதாகக் கூடச் சொல்லலாம். விலையுயர்ந்த பொருள்களையும் பூக்களையும் செய்தால் தொழிலாளர்க்குப் பணம் கிடப்பதாக விவாதிக்கப் பார்க்கிறார்கள். தொழிலாளர்கள் மந்திரிகளுடைய உதவியில்லாமலே பிழைத்துக் கொள்வார்கள். இந்தக் கனவான்கள் வெறும் உல்லாசப் பிரயாணம் செய்வதில்லை. அவர்கள் ஜனங்களுடைய குறைகளை அறிந்து கொள்வதற்காகவே சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் நல்லவர்களாயிருந்தால் அதுவே அவர்களுக்கேற்ற பரிசாகும். அப்படியிருக்க உபசாரப் பத்திரங்கள் எழுதி அவர்களுடைய குணங்களைப் புகழ்வானேன் ? அதற்குப் பதிலாக உபசாரப் பத்திரங்கள், ஏதேனும் குறைகளும் கஷ்டங்களும் இருந்தால் அவைகளை மட்டுமே கூறுவனவாக யிருக்க வேண்டும். இந்தக் காலத்தில் மந்திரிகளும் அவர்களுடைய காரியதரிசிகளும் செய்யவேண்டிய கஷ்டமான வேலை அதிகமாக யிருக்கிறது. அந்த நிலைமையில் புகழ் மொழிகள் உரைப்பது உதவி செய்வதற்குப் பதிலாக இடையூறு செய்வதாகவே இருக்கும்.

முஸோரி, மோ. க. காந்தி
1—6—46.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணாமலை.